DINAKARAN

24 OCT 2022

PAGE 13

புதுச்சேரி பல்கலை, பஜன்கோவா, ஜிப்மர் சார்பில்

# ஒருங்கிணைந்த கூட்டமைப்பு உருவாக்கம்



புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் சார்பில் ஒருங்கிணைந்த கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி, அக். 24: புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஜிப்மர், பஜன்கோவா, முதுகலை மையம் மற்றும் பிகேஐஇடி ஆகியவற்றை கொண்டு புதுச்சேரி பல்கலைக்கழகம்-காரைக்கால் வளாகம், டிஎஸ்டி-எஸ்எடிஎச்ஐ 2022க்கான ஒருங்கிணைந்த கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் துறை, காரைக்கால் வளாகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை-அதிநவீன பகுப்பாய்வு மற்றும் தொழில்நுட்ப உதவி நிறுவனங்கள் 2022ன் கீழ் ஒரு திட்டத்தை தொடங்க முன் மொழிந்தது.

எஸ்எடிஎச்ஐ ஒருங்கிணைந்த கூட்டமைப்பை, காரைக்கால் ஜிப்மர், பண்டிட் ஜவஹர்லால் நேரு வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அரசு முதுகலை ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், பெருந்தலைவர் காமராஜர் இன்ஜினியரிங் இன்ஸ்டிடியூட் ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.

ஆர்&டி-ல் மேம்பட்ட நுட்பங்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையில் உள்ள அறிவியல் சமூகத்தின் தேவையை சமாளிக்கவும், இந்திய அரசு அதிநவீன பகுப்பாய்வு மற்றும் தொழில்நுட்ப உதவி நிறுவனங்களை அமைக்க தொடங்கியுள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழகம், காரைக்கால் வளாகத்தில் அதன் கூட்டமைப்பு நிறுவனங்களுடன் முன்மொழியப்பட்ட எஸ்எடிஎச்ஐ மையத்தின் உயர்தர அதிநவீன கருவிகள் மற்றும் ஸ்மார்ட் உற்பத்தி வசதிகளுடன் பொருத்தப்பட உள்ளது.

இதுபொதுவாக பல்கலைக்கழகங்கள், ஆர்&டி நிறுவனங்கள், குறு-சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், உற்பத்தி நிறுவனங்கள் ஆகியவற்றால் வாங்க முடியாது. புதுச்சேரி பல்கலைக்கழகம், காரைக்கால் வளாகத்தின் இந்த முயற்சியின் பலன், தொடக்க நிலை-தொழில் நிறுவனங்கள், எம்எஸ்எம்இகள் மற்றும் குறைந்த நிதியுதவி பெற்ற கல்வி நிறுவனங்களுக்கு அதிநவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை தாராளமாக பயன்படுத்த வசதி செய்து தருவதாகும்.